Tamilmanam International Research Journal of Tamil Studies ISSN: 3049-0723 (Online) Peer Reviewed Multidisciplinary Monthly International Journal
Vol. 1 No. 06 (2025): Tamilmanam March 2025

# Artists life in Aatrupadai Books : A Research

**Dr. M.Dhanalakshmi**

(Guide) Assistant Professor, Department of Tamil Liretature, Annamalai University, Annamalainagar.

**K.Elavarasi**

Ph.D. Research Scholar, Department of Tamil Literature, Annamalai University, Annamalainagar.

## Abstract:

Sangam literature, a treasure trove of poetic and grammatical works, stands as a testament to the distinct cultural identity of the Tamil people. These literary and grammatical masterpieces offer invaluable insights into the long-standing culture and unique civilization of the Tamils, providing a window into their ancient traditions and values. The way of life during the Sangam period was deeply rooted in a natural and organized social structure, reflected in the themes and settings found within the literature. Sangam literature is broadly classified into two main collections: Ettutogai (The Eight Anthologies) and Pattuppattu (The Ten Idylls). While both offer rich perspectives on Sangam society, Pattuppattu is particularly notable for its frequent depiction of arts and artists. This article aims to explore the role and contribution of various artists, specifically focusing on the Panar, Viraliyar, Koothar, and Porunar, renowned for their mastery of dance, song, and music, within the broader context of Sangam art and culture. By examining their presence in Sangam literature, we can gain a deeper understanding of their artistic practices and their significance within the social fabric of the Sangam period.

**Keywords**: Sengai, caste, religion, ethnicity, profession, economy, language

Tamilmanam International Research Journal of Tamil Studies ISSN: 3049-0723 (Online) Peer Reviewed Multidisciplinary Monthly International Journal
Vol. 1 No. 06 (2025): Tamilmanam March 2025

# ஆற்றுப்படை இலக்கியங்களில் கலை மாந்தர்கள்

**முனைவர் மா.தனலட்சுமி,**
(நெறியாளர்) உதவிப்பேராசிரியர், தமிழியல்துறை அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்

**கு.இளவரசி**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழியல்துறை தமிழியல்துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்.

## முன்னுரை

சங்க இலக்கியம் இலக்கிய வளமும், இலக்கண வளமும் பெற்று தனித்தியங்கவல்ல சிறப்பினை உடையது. தமிழர்களின் மிக நீண்ட பண்பாட்டிற்கும் தனி சிறந்த நாகரிகத்திற்கும், பழம்பெரும் மரபுகளை புரிந்து கொள்வதற்கும் கலைகள் சான்றாக விளங்குகின்றது. சங்ககால வாழ்க்கை முறை இயற்கையமைப்பை அடிப்படையாகக் கொண்டுள்ளது. சங்க இலக்கியத்தை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்று இரண்டாக பகுத்துள்ளனர். இதில் பத்துப்பாட்டில் கலைகளும், கலைமாந்தர்களும் அதிகமாக காணப்படுகின்றனர். பத்துப்பாட்டில் ஆடல், பாடல், இசைக் கலையில் சிறந்து விளங்கிய பாணர், விறலியர், கூத்தர், பொருநர் உள்ளிட்ட கலைப்படைப்பாளர்கள் எவ்வாறு கலையில் ஈடுபட்டுள்ளனர் என்பதை அறிய முயல்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆற்றுப்படை இலக்கியங்கள்

ஆற்றுப்படை இலக்கியங்கள் பண்டைத் தமிழரின் வாழ்க்கை, அரசியல், கொடை, புகழ், போர்த்திறம், கல்வி, கலை ஆகியவற்றை சுவைப்பட எடுத்துக் கூறுகிறது. பண்டைத் தமிழரின் வாழ்வில் கலைகளும், கலைஞர்களும் மிகச் சிறந்த இடத்தைப் பெற்றிருந்தனர். ஆற்றுப்படை நூல்கள் கலைக்கு சிறந்த வழிகாட்டும் நூல்களாக அமைந்துள்ளது. சங்க இலக்கியத்தில் கலைஞர்கள் கருத்து சுதந்திரத்துடுனும், ஓங்கிய ஒழுக்கத்துடனும் வழிகாட்டும் மாமனிதர்களாக விளங்கினர். வறுமையிலும், செம்மையைக் கடைப்பிடித்த கலைஞர்கள் ஆற்றுப்படை நூல்களில் காணப்படுகின்றனர். ஆற்றுப்படை நூல்களை,

“முருகு, பொருநாறு, பாணிரண்டு முல்லை

பெருகு வளமதுரைக் காஞ்சி – மருவினிய

கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சிப் பட்டினப்

பாலை கடாத்தொடும் பத்து”

என்று பத்துப்பாட்டு நூல்களில் வகைப்படுத்தியுள்ளனர். மேலும் இவற்றில் ஆற்றுப்படை நூல்களாக திருமுருகாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, மலைபடுகடாம் என்பதை ஆற்றப்படை நூல்களாக குறிப்பிட்டுள்ளனர். இவற்றில் கலைகள் அதிகமாக வெளிப்படுவதை அறிந்துக்கொள்ளலாம்.

**கலைமாந்தர்கள்**

கலை எவ்வளவு சிறந்ததாயினும் அது தோன்றகின்ற விதம் மனிதனின் சக்தியில் அடங்கியுள்ளது. சங்க இலக்கியத்தில் சிறந்து விளங்கிய கலைஞர்களை நூலறி புலவர், தச்சர், கம்மாளர், மண்ணீட்டாளர் என்றும் ஓவியக்கலையில் சிறந்து விளங்கிய கலைஞர்களை தண்ணுள் வினைஞர் என்ற பெயராலும், இசை, நடனம் போன்ற கலையில் சிறந்து விளங்கிய கலைஞர்களை பாணர், கூத்தர், பொருநர் என்ற பெயராலும் அழைக்கப்படுவதை இலக்கியங்கள் வழி அறியமுடிகிறது. பிறதுறைக் கலைஞர்களை விட இசையோடு தொடர்புடைய கலைஞர்கள் இலக்கியத்தில் சிறப்புப் பெற்றிருந்தனர். கலைஞர்களின் வாழ்க்கைமுறைப் பதிவுகளை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன.

கலைஞர்களை வாழ்க்கை முறை (ம) தொழில்முறை என்று இருவகையாக பகுத்து அதனை இரண்டாக இசைக்கருவி தொடர்பில் பாணர், கூத்தர், விறலியர், பொருநர் என்றும் மற்றொரு பிரிவில் இசைக்கருவி முறையில் புலவர்கள், தொழில் முறையில் சிற்பம், ஓவியம் என்றும் பிரித்தும் காட்டுகின்றனர். மேலும் பத்துப்பாட்டு நூல்களில் கலைஞர்களைப் பற்றி,

“கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்

ஆற்றிடக் காட்சி உறழத் தோன்றி

பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறிஇச்

சென்று பயனெதிர்ச் சொன்ன பக்கமும்”

(தொல்.பொருள். புறம். 36)

என்று தொல்காப்பியர் தனது புறத்திணையியல் நூற்பாவில் ஆற்றுப்படைக் கலை மாந்தர்களுக்கான இலக்கணத்தை சிறப்பாக வகுத்தளித்துள்ளார். கலை மாந்தர்களை பற்றி பின்வருமாறு விரிவாக காணலாம்.

**பாணர்**

பாணர் இசைக்கலையில் வல்லுநர். பல நரம்புகளை உடைய பெரிய யாழை இசைத்துப் பாடுபவர் 'பெரும்பாணர்' எனப்பட்டனர். சிறிய யாழை இசைத்தப் பாடுபவர் 'சிறுபாணர்' எனப்பட்டனர். இப்பாணர்கள் வள்ளல்களை நாடிச் சென்று பாடி பரிசில் பெற்றனர். பாணர்களின் வாழ்க்கை மன்னர்களையும், வள்ளல்களையும் நாடி சென்று பரிசில் பெறும் நிலையை,

"கையறு கடன்நிறை யாழே மெய்யாது

புரவலர் இன்மையின் பசியே, அரையது

வேற்று அழை நுழைந்த வோநனைசிதாஅர்

ஓம்பி உடுத்த உயவல் பாண!" (புறம். 69)

என்ற புறநானூறு வரிகள் அரசவையில் பாணர் நின்ற நிலையினையும், தொழிலையும், வறுமையினையும் விளக்குகின்றன. பாணனின் கையில் இலக்கணம் பொருந்திய யாழுடன், ஆதிரிப்பார் இல்லாமையால் வயிற்றில் பசியுடன் இடையில் வேர்வையால் நனைந்த கந்தலாடையை உடுத்தியிருந்தான் என்று கூறும்போது பாணனின் வறுமை நிலையினையும் கலைத்திறனையும் அறிய முடிகிறது. மேலும் பாணன் வறுமை அவனை வாட்டும்போது அவன் பெற்ற கல்வியை இகழ்ந்துப் பேசுவதாய் பெரும்பாணாற்றப்படை,

"கல்லென் சுற்றமொடு கால் கிளர்ந்த திரிதரும்

புல்லென யாக்கைப் புலவுவாய்ப்ப பாண!" (பெரு.)

என குறிப்பிடுகிறது.

சங்ககால இசைக்கவிஞர்களில் பாணர்கள் சிறப்புப் பெற்றவராக விளங்கினார்கள். பண்களை குரல் வழியாகவும், யாழ், குழல் முதலிய இசைக்கருவிகள் வழியாகவும் பாணர்கள் தம் திறமையை வெளிப்படுத்தினார்கள். நச்சினார்க்கினியர் பாணர்களை இசைப்பாணர், யாழ்ப்பாணர், மண்டைப் பாணர் என்று மூன்ற வகையாகப் பிரித்துள்ளனர்.

“களங்கனி அன்ன கருங்கோட்டு சீறியாழ்ப்

பாடுஇன் பனுவல் பாணர் உய்தெனக்

களிறு” (புறம். 57)

என்று புறநானூறு வரிகள் இசைப்பாணர்களைப் பற்றியும், பதிற்றுப்பத்து,

“வாங்கு இரு மருப்பின் தீந்தொடை பழுனிய

இடனுடைப் பேரியாழ்பாலை பண்ணி” (பதி.பத்து. 66)

என்ற வரிகளில் யாழ்ப்பாணர்களைப் பற்றிய செய்தியும் காணமுடிகிறது.

**விறலியர்**

பாணர் குலத்தில் பிறந்த பிரிவினருள் விறலியும் ஒருவர். விறல் என்னும் சொல் வெற்றியைக் குறிக்கும் சொல்லாகும். மன்னரின் வெற்றியைப் புகழ்ந்து பாடுவதும், தன்னுடைய உள்ளக் குறிப்பை விரல்களின் மூலம் வெளிப்படுத்துவதும் இவரியல்பாதலால் விறலி என அழைக்கப்பட்டனர். சங்க இலக்கியம் விறலியை இசையோடு ஆடலோடும் தொடர்புடையவளாக 42 இடங்களில் பதிவு செய்துள்ளது. பாணர் குலத்தில் பிறந்த விறலியும், பாடினியும் ஒருவரே என்று கருத்து நிலவுகிறது. ஆனால் தொல்காப்பியமும், பரிபாடலும் இருவரும் வேறு வேறானவர் என்று கூறுகிறது. இதனை,

“தோழி, தாயெ, பார்ப்பன், பாங்கன்,

பாணன், பாடினி, இளையர், விருந்தினர்,

கூத்தர், விறலியர், அறிவர், கண்டோர்

யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப” (தொல்.கற். நூ. 19)

என்ற தொல்காப்பியரின் நூற்பா வழி அறியமுடிகிறது. பாடும் இயல்பும் ஆடும் இயல்பும் உடையவள் விறலி என்பதை,

“ஒருதிரம் பாடல் நல்விறலியா; ஒல்குபு நுடங்க” (பரி. 17)

என்ற பாடலின் வழி அறியலாகிறது. மேலும் இக்கால நடிகையர் கண்கவரும் உடற்கட்டும் பேரழகும் பெற்றிருத்தல் போலவே சங்ககால விறலியரும் பெற்றிருந்தனர் என்பதை,

“ஐதுவீழ் இகுபெயல் அழகுகொண்டு அருளி

நெய்கணிந்து இருளிய கதுப்பின்; கதுப்புஎ,

…………………………………………………………

மடமான் நோக்கின் வாள்நுதல் விறலியர்” (சிறு)

எனம் சிறுபாணாற்றப்படை அடிகளால் அறியலாம்.

**பொருநர்**

பொருநரும் பாணரைப் போன்று இசைமரபைச் சார்ந்தவராவர். சங்க இலக்கியத்தில் பொருநன் என்ற சொல் வீரன், அரசன், கூத்துக்கலைஞன் என்ற பல பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் சங்க இலக்கியத்தில் குறிப்பிடும் பொருநர் போர்க்களத்தோடு தொடர்புடையவர் என்பதை போர்க்களப் பொருநர், போர்க்களத்திற்குச் சென்ற வீரர்கள் உற்சாகம் அடையுமாறு முரசினைக் கொட்டி வஞ்சியை பாடினர் என்பதை,

“ஒருகண் மாக்கினை தெளிர்ப்ப ஒற்றிப்

பாடுஇமிழ் முரசின் இயல் தேர்த்தந்தை

வாடா வஞ்சி பாடினேன்” (புறம். 394)

என்று புறநானூறு சுட்டுவதை இப்பாடலின் வழி அறியலாம்.

**கூத்தர்**

தொல்காப்பியர் குறிப்பிடும் நால்வகைக் கலைஞருள் கூத்தர் என்போர். பாடுவதோடு, ஆடவும் செய்யும் கலைஞராவர். கூத்து என்ற சொல்லானது ஆடல், நாட்டிய நிகழ்ச்சி எனும் பொருளைக் குறிக்கின்றது. சங்க காலத்தில் வெற்றியின் போதும் மகிழ்ச்சியின் போதும் ஆண்களும், பெண்களும் சேர்ந்து பெருங்கூட்டத்தினருடன் ஆடிப்பாடினர். கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன், தன்னை நாடி வந்த கோடியர்க்கும் அவனது சுற்றத்திற்கும் குதிரைகளைப் பரிசாக வழங்கினான் என்பதை,

“கோடியர் பெருங்கிளை வாழ, ஆடுஇயல்

உளை அவிர் கலிமாப் பொழிந்தவை எண்ணின்” (பதி.பத்து. 42)

என்று பதிற்றுப்பத்து வரிகளின் மூலம் அறியலாம்.

## முடிவுரை

அன்றைய கலைஞர்களின் பண்பு இன்றைய கலைஞர்களுக்கு இருக்கின்றது. இங்கு கலைகளை விட கலை மாந்தர்களே நன்கு மதிக்கப்படுகின்றனர். நாட்டுப்புறக் கலைஞர்களால் மக்களிடையே நன்மதிப்பும் மரியாதையும் பெற இயலவில்லை. தெருக்கூத்து, வில்லுப்பாட்டு போன்றவை கோவில் திருவிழாக்களிலும் நடக்கின்றன. சங்க காலத்தில் கலையும், கலைஞர்களும் மன்னர்களால் ஆதிரக்கப்பட்டனர். மேலும் கலை மாந்தர்கள் கலையை மன்னர்களிடம் வெளிப்படுத்தி பொன், பொருள், மலை, நாடு, குதிரை போன்றவற்றை பரிசாக பெற்றள்ளனர் என்பதையும், கலைகளை கைவினைப்பொட்கள், ஓவியம் ஆகியவற்றின் மூலமாக வெளிப்படுத்தி சிறந்த கலை மாந்தர்களாக திகழ்ந்து தங்களது வாழ்க்கையைக் கொண்டு சென்றுள்ளனர் என்பது நமக்கு புலப்படுகிறது.

## துணைநூற்பட்டியல்

ம்.- **தொல்காப்பியமும் பொருளதிகாரமும் மூலமும் உரையும்**
கதிர் பதிப்பகம்
திருவையாறு

2. புலியூர்க்கேசிகன். - **புறநானூறு மூலமும் உரையும்**
கௌரா பதிப்பகம்
பதிப்பு-2006

3. சா. நசீமாபானு. - **பெரும்பாணாற்றுப்படை**
கற்கை புத்தக நிலையம்
பதிப்பு-2016

4. புலியூர்க்கேசிகன். - **பதிற்றுப்பத்து தெளிவுரை**
ஶ்ரீ செண்பகா பதிப்பகம்
பதிப்பு-2016

5. டாக்டர் உ.வே. சாமிநாதையர். - **பத்துப்பாட்டு மூலமும்**
நச்சினார்க்கினியாருரையும்
டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம்
பதிப்பு-2018

**References**

Kavippiththan. Sengai. Neelam Publications, Chennai. First Edition – 2023

Mullai Muthaiah. *Perarignar Bernard Shaw* (The Great Scholar Bernard Shaw). New Century Book House - 2010.

Tho. Paramasivan. *Bharathidasan Paadalgal* (Bharathidasan's Songs). New Century Book House. Eighth Edition - 2009.

Moorthy, A.K. *Anna'vin Medai Thamizh* (Anna's Oratorical Tamil). Manivasagar Pathippagam. First Edition - 1997.

Varadarajan, G. *Thirukkural Urai Vilakkam* (Commentary and Explanation of Thirukkural). Pazhaniappa Brothers. First Edition - 2021.